


Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 30

வெள்ளிக்கிழமை
26 டிசெம்பர் 2025

மார்கழி 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50


# அனைத்து மக்களுக்குமான அரசியலமைப்பே அவசியம்

## அநுர அரசுக்கு பொன்னான வாய்ப்பு
## சர்வதேச சிறுபான்மையினக் குழு வலியுறுத்து

**கொழும்பு, டிசெம்பர் 26**

**அனைத்து மக்களுக்குமான அரசியலமைப்பை உருவாக்கக் கூடிய வரலாற்று வாய்ப்பை ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதுவரை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் முற்றாக நடைமுறைக்கு வரவேண்டும் - இவ்வாறு 'சர்வதேச சிறுபான்மையினக்குழு' எனும் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.**

»11

## பட்ஜெட் நிதிப் பயன்பாடு யாழ்.மாவட்டம் முதலிடம்

விரிவு பக்கம்:-05

## சிவபுரத்தில் பாலம் அமைக்க 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

அமைச்சர் விஜேபால தெரிவிப்பு

விரிவு பக்கம்:-02



## ரணில் – சஜித் இணைவில் சிறு கட்சிகள் சங்கமிக்கும்

ரவி கருணாநாயக்க நம்பிக்கை

விரிவு பக்கம்:-02

## மனச்சாட்சிபற்றிக் கதைக்க அரசுக்குத் தகுதியில்லை!

முஜிபுர் ரஹ்மான் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 26

தேசிய மக்கள் சக்தியினர் மனச்சாட்சி தொடர்பில் கதைப்பது நகைப்புக்குரிய விடயம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:-

»11

## வாடகை வீட்டில் மஹிந்த ராஜபக்ச



கொழும்பு, டிசெ. 26

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, தற்போது கொழும்பு நுகேகொடை பகுதியில் உள்ளவீடொன்றில்

»11

## சுனாமியில் உயிரிழந்தோரின் 21ஆவது நினைவுதினம் இன்று

கொழும்பு, டிசெ. 26

சுனாமிப்பேரலையில் உயிரிழந்தோரின் 21ஆவது நினைவுதினமும், தேசியப் பாதுகாப்பு தினமும் நாடளாவிய ரீதியில் இன்று கடைப்பிடிக்கப் படவுள்ளது.

»11

## சிறுமி டினோஜாவின் சாவுக்கு நீதியான விசாரணை தேவை

ரவிகரன் எம்.பி. வலியுறுத்து



முல்லைத்தீவு, டிசெ. 26

முல்லைத்தீவு - சிலாவத்தை பகுதியைச் சேர்ந்த குகநேசன் டினோஜா என்ற சிறுமியின் இறப்பில், மருத்துவத் தவறுகள் நிகழ்ந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படும் நிலையில், இது தொடர்பில் முழுமையான விசாரணை தேவை என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டம் சிலாவத்தை பகுதியைச் சேர்ந்த டினோஜா (வயது - 12) என்ற

»11



பலகோடிரூபா பெறுமதியான திருட்டு

## யாழ். குற்றக்குழு கம்பளையில் கைது

அவர்களுக்கு எதிராக ஏராளம் பிடியாணை

யாழ்ப்பாணம், டிசெ. 26

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்று, வவுனியா, நுவரெலியா, கம்பளை உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏராளமான திருட்டுகள் மற்றும் கொள்ளைகளில் ஈடுபட்ட குற்றக் குழுவொன்று கம்பளை கலஹாவில் வைத்துக் கைது செய்யப் பட்டுள்ளது.

25 இற்கும் மேற்பட்ட

»11

பிரசாந்தி புராணி

"செவிடன் காதில சங்கு ஊதுறதும் ஒண்டுதான் இவைக்கு அட்வைஸ் சொல்றதும் ஒண்டுதான் கண்டியளோ"

சிறுமி டினோஜாவின் இறப்பு

## மருத்துவத் தவறெனில் கடும் நடவடிக்கைகள்!

முல்லை. மாவட்ட சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 26

முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியைச் சேர்ந்த சிறுமி டினோஜாவின் உயிரிழப்பில் மருத்துவத் தவறுகள் நேர்ந்திருப்பின் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரசேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார். முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப் புக்குழுக் கூட்டத்தில்

»11

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 25.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4296 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 19 26 48 73 |
| விசேட எழுத்து | W |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 25.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1363 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 12 29 43 45 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 25.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0322 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 4 5 2 8 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 25.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2402 |
| ஆங்கில எழுத்து | K |
| சுப்பர் இலக்கம் | 24 |
| வெற்றி இலக்கங்கள் | 13 19 26 58 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 25.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6054 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 3 4 1 2 1 5 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 25.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2084 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 03 07 18 70 |
| விசேட எழுத்து | M |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 25.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0170 |
| வெற்றி இலக்கினம் | மேஷ |
| வெற்றி இலக்கங்கள் | 23 37 65 |

# சிவபுரத்தில் பாலம் அமைக்க 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு!

## அமைச்சர் விஜேபால தெரிவிப்பு

**முல்லைத்தீவு, டிசெ.26**

**மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள சிவபுரம் குத்துப் பாலத்தை அமைப்பதற்கு 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தம் தொடர்பான விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

வெள்ள அனர்த்தம் ஏற்படும் போது இந்த சிவபுரம் குத்துப் பாலத்தினூடான வீதிப்போக்குவரத்து முற்றாகத் தடைப்படும். இதனால் மாந்தைகிழக்கு தனித்தீவாக மாறுகின்ற நிலைமை ஏற்படுகின்றது.

இந்த நிலைமைகளைக் கருத்திற்கொண்டு தற்போது ஆற்றுச் சருக்கையாக (கோஸ்வேயாக) காணப்படும் சிவபுரம் குத்துப் பாலத்தை, மழைக்காலத்திலும் போக்குவரத்துக்குத் தடைப்படாத வகையிலும் பாலமாக அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ரவிகரன் எம்.பி. இதன்போது சுட்டிக்காட்டியிருந்தார். (ச-246)

| சுபிரி தன சம்பத | | | |
|---|---|---|---|
| திகதி | 25.12.2025 | தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | F | வெற்றி இலக்கம் | 1 5 9 3 3 6 |
| வெற்றி வாரம் | 0762 | | |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி | 25.12.2025 | தினம் | வியாழக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3028 | ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கம் | 19 40 63 68 | | |

| சனிதா | | | |
|---|---|---|---|
| திகதி | 25.12.2025 | தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | V | வெற்றி இலக்கம் | 15 25 29 67 |
| வெற்றி வாரம் | 5189 | | |

| SASIRI | | | |
|---|---|---|---|
| திகதி | 25.12.2025 | தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0858 | வெற்றி இலக்கம் | 04 06 46 |

| லக்ன ராசி | | | |
|---|---|---|---|
| திகதி | 25.12.2025 | தினம் | வியாழக்கிழமை |
| தனு | | வெற்றி இலக்கம் | 08 27 50 55 |
| சீட்டிழுப்பு வாரம் | 4740 | | |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | 25.12.2025 | தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | X | சுப்பர் இலக்கம் | 02 |
| வெற்றி இலக்கம் | 23 50 63 69 | வெற்றி வாரம் | 2204 |

| அத கோடிபதி | | | |
|---|---|---|---|
| திகதி | 25.12.2025 | தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | Q | வெற்றி இலக்கம் | 13 14 41 51 |
| வெற்றி வாரம் | 2854 | | |

# ரணில், சஜித் இணைவில் சிறு கட்சிகள் சங்கமிக்கும்

## ரவி கருணாநாயக்க நம்பிக்கை

கொழும்பு, டிசெ.26

ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ ஆகியோர் ஒன்றிணைந்த பின்னர் தமிழ், முஸ்லிம் கட்சிகளும் அந்த அணியில் இணையும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பவற்றை ஒன்றிணைப்பது தொடர்பில் முன்னெடுக்கப்படும் முயற்சி தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ரணில் விக்கிரமசிங்க பதவி விலகுகின்றாரா, நாடாளுமன்றம் வருவாரா என்பது முக்கியம் அல்ல. அவரும், சஜித்தும் இணைந்து செயற்படவேண்டியதுதான் முக்கியம்.

அந்த ஒன்றிணைவுக்காகவே நானும் செயற்பட்டுவருகின்றேன். எனினும், அதனை நான் வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. அதேபோல சிறு கட்சிகளையும் இணைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளேன். ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன இணைந்த பின்னர் ஏனைய சிறு கட்சிகளையும் இணைத்துக்கொள்ளவேண்டும். தமிழ், முஸ்லிம் கட்சிகளும் எம்முடன் இணையும். அதற்கான சிறப்பான ஆரம்பம் கொழும்பில் வழங்கப்பட்டுள்ளது" - என்றார். (ச-44)



# சுற்றிவளைப்பு; 649 பேர் கைது

கொழும்பு,டிசெ.26

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, நாடு முழுவதும் போதைப்பொருளைத் தடுக்கும் 'முழு நாடுமே ஒன்றாக' தேசிய வேலைத்திட்டத்தின்கீழ் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் 649 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தச் சோதனை நடவடிக்கைகளில் 22 கிலோ 486 கிராம் ஹெரோய்ன், 172 கிலோ 572 கிராம் ஐஸ், 02 கிலோ 616 கிராம் கஞ்சா, 12,734 கஞ்சாச் செடிகள், 1 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 8 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 1039 போதை மாத்திரைகள், 11 கிராம் 200 மில்லிகிராம் மதனமோதகம் மற்றும் 1 கிலோ 301 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன. (ச-இ)

# சீன கம்யூனிஸ்ட் கட்சி – ஜே.வி.பி. உறவை வலுப்படுத்தச் சந்திப்பு!

கொழும்பு, டிசெ.26

சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும், ஜே.வி.பி.க்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தூதுக்குழுவினர் கொழும்பு பெலவத்தையிலுள்ள ஜே.வி.பி. தலைமையகத்துக்கு நேற்று முன்தினம் சென்றிருந்தனர். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 20ஆவது மத்திய குழு உறுப்பினரும், ஷிசாங் தன்னாட்சி பிராந்தியத்தின் கம்யூனிஸ்ட் கட்சி செயலாளருமான வாங் ஜுவான்செங் தலைமையிலான குழுவினரே இவ்வாறு சென்றிருந்தனர்.

ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா உள்ளிட்ட கட்சிப் பிரமுகர்கள், சீனக் குழுவினரை வரவேற்றனர்.

வாங் ஜுவான்செங்கிற்கும், ரில்வின் சில்வாவுக்கும் இடையில் பேச்சு இடம்பெற்றது. சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும், ஜே.வி.பி.க்கும் இடையிலான நீண்டகால நட்பு மற்றும் ஒத்துழைப்புக் குறித்து இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. டித்வா சூறாவளியின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சீன அரசாங்கம் வழங்கிய உதவி மற்றும் ஆதரவுக்கு ஜே.வி.பி.யின் செயலாளர் இதன்போது நன்றி தெரிவித்தார். (எ-44)

# புதிய கல்விச் சீர்திருத்தம் ஜனவரியில் சாத்தியமில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.26

புதிய கல்விச் சீர்திருத்தத்தை ஜனவரி மாதம் முதல் செயற்படுத்துவது நடைமுறைக்குச் சாத்தியமற்ற விடயம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது-

இந்தத் திட்டம் தொடர்பாக மீளாய்வு செய்து உரிய முடிவு எடுக்கப்படவேண்டும். மக்களினதும், பாடசாலை மாணவர்களினதும் மனநிலைகள் தொடர்பாக நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர்களினது மனித மற்றும் அடிப்படை உரிமைகளை மீறக்கூடாது.

பாடசாலைக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு அரசாங்கத்திடம் முறையான திட்டம் இல்லாததால் மாணவர்களே பாதிக்கப்படுகின்றனர்.


அரசாங்கத்தின் திட்டத்தின்படி ஜனவரி மாதம் முதல் புதிய சீர்திருத்தங்களை செயற்படுத்துவது நடைமுறைக்குச் சாத்தியமற்றது. இதுதொடர்பாக மீள்பரிசீலனை செய்து தீர்மானம் எடுக்கவேண்டும்-என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரசியல்வாதிகளின் ஊழலாலேயே சீற்றம் கொண்டது இயற்கை

## பேராயர் மல்கம் தெரிவிப்பு



**கொழும்பு,டிசெ.26**
**மேசைக்கு கீழால் பணத்தை வாங்கிக் கொண்டு இயற்கைக்கு மாறான செயற்பாடுகளுக்கு அனுமதியளித்த அரசியல்வாதிகள் செய்த தவறே பேரிடரில் மண்சரிவுகள் மற்றும் வெள்ளப் பெருக்கு ஏற்பட காரணமாகும் என பேராயர் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.**

இயேசு பாலகன் பிறப்பான நத்தார் பண்டிகையின் தேசிய நிகழ்வு நேற்று உஸ்வட்டகெய்யாவ தேவாலயத்தில் நடைபெற்றது. அங்கு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் அரசியல்வாதிகள் பணத்தைப் பெற்றுக்கொண்டு காடழிப்பு, சதுப்பு நிலங்களை நிரப்புதல், மலைகளில் கட்டடங்கள் அமைப்பதற்கு அனுமதி அளித்தல் போன்ற சுற்றுச்சூழலை நாசப்படுத்த உதவியளித்தனர். அத்தோடு அவற்றுக்கு பக்கபலமாகவும் இருந்துள்ளனர். எவ்வித ஒழுக்கமும் அற்ற நிலையில் குப்பை கூழங்களை வீதியில் வீசி, முழு நாட்டையும் அசுத்தமாக்கியது யார்? அது மட்டுமல்ல, பணத்தை சேமிக்க துடிக்கும் பேராசைகளால் இந்த நிலைமை ஏற்பட்டது. ஆனால் நாம் மரணிக்கும் போது இவற்றை கொண்டு செல்லப்போவதில்லை - என்றார். (ச-இ)

# முன்னாள் போராளி வைதேகி அவுஸ்திரேலியாவில் இறப்பு



கான்பெரா,டிசெ.26
தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கடற்புலிகள் மகளிர் படையணிப் போராளியாகச் செயற்பட்ட வைதேகி, திடீர் சுகவீனம் காரணமாக அவுஸ்திரேலியாவில் உயிரிழந்துள்ளார்.

இராஜநாயகம் துசியந்தி என்ற இயற்பெயரைக் கொண்ட வைதேகி, கடலரசியாக கடற்புலிகள் மகளிர் படையணியில் தேசவிடுதலைக்காக பல களங்கள் கண்டு, பயிற்சியாளராகச் செயற்பட்டார். பல்துறைப் பணிகளிலும் இறுதிவரை பயணித்திருந்தார். இவர் இறுதிப்போருக்குப் பின்னர் தமிழ்நாட்டில் தஞ்சமடைந்து அவுஸ்திரேலியாவுக்குப்புலம்பெயர்ந்திருந்த நிலையில், சுகவீனம் காரணமாக நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். (க-100)



# கழன்றோடியது சில்லு; குடைசாய்ந்தது ஓட்டோ

யாழ்ப்பாணம், டிசெ.26
வீதியில் பயணித்துக்கொண்டிருந்த முச்சக்கரவண்டியின் முன்சக்கரம் திடீரென கழன்று உருண்டோடிய நிலையில் முச்சக்கரவண்டி குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவம் பருத்தித்துறை முதலாம் கட்டைப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. முதலாம் கட்டைச் சந்திக்கு அருகாமையில் பிரதான வீதியில் பயணித்துக்கொண்டிருந்தபோது திடீரென முன்சக்கரம் கழன்று உருண்டோடியது. இதையடுத்து குறித்த முச்சக்கரவண்டி வீதியில் தூக்கி எறியப்பட்டு கீழே விழுந்து குடைசாய்ந்தது. குறித்த வீதியூடாக அவ்வேளையில் கனரக வாகனங்கள் ஏதும் பயணிக்காதிருந்தமையால் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டு அதிஷ்டவசமாக சாரதி தப்பியுள்ளார். (ச-100)

# டித்வா புயல் பாதிப்பு; உதவித்தொகை வழங்கல்

சாவகச்சேரி, டிசெ.26
தென்மராட்சிப் பிரதேசத்தில் டித்வா புயலால் பாதிக்கப்பட்ட 2,014 குடும்பங்களுக்கான தலா 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு அவர்களின் வங்கிக்கணக்குகளுக்கு பிரதேச செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதற்கான விநியோகம் வங்கிகளில் இடம்பெறுகிறது. அத்துடன் புயலால் குடியிருப்புகள் சிறு சேதத்திற்குள்ளான 40 குடும்பங்களுக்கான முதற்கட்ட கொடுப்பனவுகளும் வங்கிக்கணக்குகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-41-9)

# சுற்றாடல் சட்டங்களை மீறினால் கடும் நடவடிக்கை

கொழும்பு, டிசெ.26
சுற்றாடல் சட்டங்களை மீறும் நபர்களுக்கு எதிராகச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இதுதொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான எப். யூ.வுட்லர் தெரிவித்துள்ளதாவது-
கடந்த சில நாள்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது, சுற்றாடல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் 23 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
எதிர்காலத்தில் நாடு முழுவதும் இவ்வாறான சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார். (ஏ-இ)

# உயிரைக் கையில பிடிச்சபடி...! -2

தகப்பனில்லாப் பிள்ளையில தலைமயிர் வெட்டப்பழகினமாதிரி, ஏற்கனவே சண்டையால பாதிக்கப்பட்ட சனத்திட்ட உப்பிடியான 'ரஷ்ய மெடிசின்' படிச்சவையை வேலை செய்ய அனுப்பினால், சிக்கல்கள் வரத்தான் செய்யும். மாட்டிறைச்சி சாப்பிட்டு அலர்ஜிக் வந்த பிள்ளை ஊசி போட்டதும், மயங்கிவிழுந்து கொஞ்ச நேரத்தில உயிரை விட்டதால சொந்தக்காரர் ஏங்கிப்போட்டினம். சாதாரண அலர்ஜிக் தானே எண்டு கூட்டிக்கொண்டுவந்த பிள்ளையை இப்பிடிக் கண்ணிமைக்கிற நேரத்தில பிணமாக் கொண்டுபோறதெண்டால் எப்பிடி இருக்கும்? ஆஸ்பத்திரியிலேயே எல்லாரும் குளறி அழத்தொடங்கிட்டினம். இப்பிடி அவையள் அழுதுகொண்டிருக்க கொஞ்ச நேரத்தில 'பொடியை' பெற்றாரிட்ட ஆஸ்பத்திரிக்காரர் குடுத்திருக்கினம். பிள்ளை செத்த அதிர்ச்சியில இருந்தவைக்கு, போஸ்ட்மாட்டம் செய்து பிள்ளையின்ர உடம்பை அறுத்து கொண்டு போகாமல், இப்பிடி உடன 'பொடியைத்' தந்தது ஆறுதலா இருந்ததால அவையள் ஒண்டும் சொல்லாமல் போட்டினம்.

ஆனால் பிறகு அந்தப்பிள்ளையின்ர மெடிக்கல் ரிப்போர்ட்டை அவைக்குத் தெரிஞ்ச ஒரு டாக்குத்தர் பார்த்திருக்கிறார். பாத்ததும் அவருக்கு அதிர்ச்சி. அந்த மெடிக்கல் ரிப்போர்ட்டில முதல் எழுதியிருந்த பவர் கூடின ஊசி மருந்தை வெட்டி அழிச்சுப்போட்டு, பவர் குறைஞ்ச மருந்தின்ர பேரை எழுதியிருந்ததை அந்த டாக்குத்தர் கண்டுபிடிச்சு, பிள்ளையின்ர சொந்தக்காரருக்குச் சொல்லியிருக்கிறார். இதுக்கு முந்தியும் அந்தச் 'சோலையான' ஆஸ்பத்திரியில மருந்துகளை மாறிக் குடுத்து சிலர் செத்திருக்கினம். ஆனால் அங்கத்தைச் சனம் இதைப் பெரிசா எடுக்காததாலை அப்பிடி மருந்தை மாத்திக் குடுத்த டாக்குத்தர்மார் தப்பிட்டினம் எண்டு அதே ஆஸ்பத்திரியில வேலை செய்யிற சிலர் சொல்லுகினம். அதோட இப்பிடிச் சந்தேகத்துக்கிடமா செத்த பிள்ளையின்ர உடலை, போஸ்ட்மட்டம் செய்யாமல் குடுத்ததும் பிழை எண்டும், அப்பிடி ஆஸ்பத்திரிக்காரரே அவசரமா 'பொடியைக்' குடுத்ததால உதில ஏதோ தில்லு முல்லு இருக்கோணுமெண்டும் கன பேருக்குச் சந்தேகம் வந்திட்டுது. அந்த ஆஸ்பத்திரியில இப்ப சட்ட மருத்துவ அதிகாரியெண்டு ஆருமில்லை. அதால போஸ்ட்மட்டம் செய்யிற வசதியில்லை எண்டு சொல்லி, அங்க சாகிற ஆக்களின்ர 'பொடியை' அப்பிடியே குடுக்கிறவையாம்.

இப்பிடிப் போஸ்ட்மட்டம் செய்யிற வசதியும், சட்ட மருத்துவ அதிகாரியும் இல்லாமல் போனது, இப்பிடியான அரைகுறை டாக்குத்தர்மாருக்கு வசதியாப் போட்டுது. அவையள் நினைச்சமாதிரி என்ன மருந்தையும் எழுதலாம், வெட்டி மாத்தலாம், அதால ஆரும் செத்தாலும் மெடிக்கல் ரிப்போட்டில எல்லாத்தையும் வெட்டி எழுதிப் போட்டு, 'வருத்தம் கூடித்தான் செத்தவை' எண்டு கதையை மாத்தலாம். ஏனெண்டால் போஸ்ட்மட்டம் செய்தால்தானே ஏன் செத்தவை எண்ட உண்மை வெளியிலவரும். இதொண்டும் தெரியாமல் - "எங்கட ஆஸ்பத்திரியில ஆரும் செத்தால் அவையின்ர பொடியை அறுத்துச் சோதிச்சு கரைச்சல் படுத்தாமல் உடனேயே தந்திடுவினம். சனத்தின்ர வேதனை அவைக்குத்தான் தெரியுது" எண்டு உந்த அரைகுறை வேலை செய்யிற டாக்குத்தர்மாருக்கு, விசயம் தெரியாமல் அங்கத்தைச் சனம் குடைபிடிக்கிறதுதான் ஆக வேதனையான விசயம். போன உயிர்களைத்தான் திரும்பக் கொண்டரேலாது. இனியாவது அங்க இப்பிடி அரைகுறை மருத்துவத்தால உயிர்கள் போகாமல் உரியவை தடுப்பினமோ?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தாய்வழி உறவில் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஒத்துழைப்புக் கிடைக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். மாலையில் உறவினர்கள்மூலம் கிடைக்கும் செய்தி மகிழ்ச்சி தரும். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள்.

**மிதுனம்:** திடீர்ச்செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** மனதில் இனந்தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். உடல்நலனில் கவனம் தேவை.

**சிம்மம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தைவழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். வாழ்க்கைத்துணைவழியில் ஆதாயம் கிடைக்கும். உறவினர்களுடன் ஏற்பட்ட மன வருத்தங்கள் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும்.

**கன்னி:** முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு மிகவும் உகந்த நாள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு வீட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை வாங்கும் வாய்ப்பு ஏற்படும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்குக் குடும்பம் தொடர்பான வேலையை முன்னிட்டு சற்று அலைச்சல் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தவும். சிலருக்கு வாழ்க்கைத்துணையுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் ஒருவரையொருவர் அனுசரித்துச்செல்வது நல்லது.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் கைக்கு வந்துசேரும். முக்கியமான பிரமுகர்களின் அறிமுகம் கிடைப்பதுடன், அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**மகரம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்குத் திடீர்ப் பணவரவுக்கும், திடீர்ச்செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** புதிய முயற்சிகளைப்பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். தொலைபேசி மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**மீனம்:** இன்று எதிலும் சிந்தித்தும் பொறுமையுடனும் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். நண்பர்களால் காரிய அனுகூலம் ஏற்படும்.





## மன்னார் செபஸ்தியாரில் கிறிஸ்து பிறப்பு திருப்பலி

மன்னார், டிசெ.26

மன்னார் மாவட்டத்தின் முதல் பேராலயமான மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் கிறிஸ்து பிறப்பு நள்ளிரவுத் திருப்பலி நேற்றுமுன்தினம் புதன் கிழமை இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் அருட்தந்தையர்கள் இணைந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். இயேசு பிறப்பை குறிக்கும் வகையில் பாலனின் திருச்சொரூபம் வைக்கப்பட்டது. தொடர்ந்து கிறிஸ்மஸ் ஆராதனைகள் நடைபெற்றன. நாட்டு மக்களைப் பாதுகாக்கவும், நாட்டில் நீடித்த அமைதி, மகிழ்ச்சி என்பன நிலவவும், புயல் மற்றும் வெள்ள அனர்த்தம் காரணமாக உயிர்நீத்த மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக விசேட பிரார்த்தனைகளும் நடைபெற்றன. தொடர்ந்து அனைவருக்கும் ஆயர் மற்றும் அருட்தந்தையர்களினால் அருளாசி வழங்கப்பட்டது. கிறிஸ்துமஸ் ஆராதனையை முன்னிட்டு தேவாலயத்தில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து விசேட பாதுகாப்பை வழங்கியிருந்தனர். (ச-41-56)

## நல்லூர் சிவன் கோவில் மஹோற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.26

நல்லூர் சிவன் கோவில் எனப்படும் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாதசுவாமி தேவஸ்தான மஹோற்சவம் நேற்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.


எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ச-41)

## அபிவிருத்திக் கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.26

கோப்பாய் வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலக பிரதேசமட்ட சிறுவர் அபிவிருத்திக்குழுக் கூட்டம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ச-41)






## கணபதி பாமாலை இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.26

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் வீற்றிருக்கும், வித்தியா கணபதி மீது பாடப்பட்ட 'வித்தியா கணபதி பாமாலை' இறுவட்டு நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. வித்தியாலய முதல்வர் திருமதி சி. கணேசானந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், முல்லைத்தீவு சண்முகரட்ணம் வித்தியாலய ஆசிரியர் ம.மணிவண்ணனும், அவரது பாரியாரும் இணைந்து வெளியிட்டனர்.

இறுவட்டுக்கான பாடல் வரிகள் மற்றும் இசையமைப்பை ஆசிரியர் எஸ்.ஜே.என். றொசான் வழங்கியிருந்தார். தயாரிப்பு மேற்பார்வையை திருமதி ப. வாகீசனும், காணொலி வடிவமைப்பை ஆசிரியர் சி.பிரதீபனும் மேற்கொண்டிருந்தனர். (க)



தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலயத்தின் கஜமுகாசூர சங்கார உற்சவம் நேற்றுமுன்தினம் புதன் கிழமை நடைபெற்றது. (ச-41-66)

## கலைவிழா

யாழ்ப்பாணம், டிசெ.26

நீர்வேலி பாலர் பகல் விடுதி மற்றும் முன்பள்ளி ஆகியவற்றின் கலைவிழா நீர்வேலிப் பாலர் பகல் விடுதியின் இ.க.சண்முகநாதன் அரங்கில் நாளை சனிக்கிழமை பி.ப. 2 மணியளவில் இடம்பெறவுள்ளது.

பாலர் பகல் விடுதித் தலைவர் வே.குணசீலன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் பிரதம விருந்தினராகவும், யாழ்.மாவட்டச் சிரேஷ்ட நன்னடத்தை உத்தியோகத்தர் வல்லிபுரம் விக்னராஜா, நிறுவன நலன் விரும்பி செல்வராணி மகாத்மாசீலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## ஐ.நா.வுக்குக் கண்துடைப்பு...!

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு மாற்றாக புதிய வரைவொன்று உருவாக்கப்பட்டு, மக்களின் பார்வைக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்தச் சட்டவரைவு மக்களின் கருத்தறிவுக்காக வெளிப்படுத்தப்பட்ட 24 மணிநேரத்தில் அரசியற் கட்சிகளினதும், நிபுணத்துவ அறிவுடையவர்களினதும் விமர்சனங்களை வாரிக் குவித்திருக்கின்றது. அதாவது, இதுவரை பேணப்பட்டுவரும், மிகவும் கொடூரமான பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பிரதியெடுக்கும்வகையில்-அதே மோசமான அம்சங்களுடன்தான் புதிய சட்ட வரைவும் உருவாக்கப்பட்டுள்ளது. புதிய சட்ட வரைவில் மெச்சுவதற்கும் பாராட்டுவதற்கும் ஒன்றுமில்லை என்பதுதான் அநேகமான விமர்சனங்களின் சாராம்சம்.

இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்பதுதான் அனைவருடைய எதிர்பார்ப்பாகவும் காணப்படுகின்றது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்பதைத்தான் கடந்த பல மாதங்களாக வலியுறுத்திவருகின்றது. தூதுவர்கள், இராஜதந்திரிகள், சர்வதேச வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் தூதுக்குழுக்கள் உள்ளிட்ட தரப்பினரும் இலங்கையின் பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியிருந்தனர். இதன் போதேல்லாம்,'புதிய சட்டம் உருவாக்கப்படும் வரைதான் தற்போதைய சட்டம் பேணப்படும்' என்று சப்பைக்கட்டு கட்டிய அரசாங்கம், தற்போது 'மாறாத கடும்போக்கை வெளிப்படுத்தி' அனைத்துத் தரப்பினருக்கும் ஒரே போடாக போட்டிருக்கிறது.

பாரதூரமான குற்றங்களைப் புரிந்த நபரொருவருக்கு, நாட்டில் தற்போதுள்ள குற்றவியல் சட்டங்களின்கீழ் 25 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட சிறைத்தண்டனையை விதிப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்திலும், இத்தகைய நீண்ட சிறைத் தண்டனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இப்போதுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பாதிப்புகளை நேரடியாக எதிர் கொண்டு, அதுபற்றி நன்கு தெரிந்தும்கூட, அதற்கு நிகரான விடயங்களை உள்ளடக்கிய சட்டத்தை உருவாக்குவதில் ஏன் தேசிய மக்கள் சக்தியினர் விடாப்பிடியாக நிற்கின்றனர் என்பது அவர்களுக்கே வெளிச்சம். அதிலும், எதிர்க்கட்சியாக இருக்கும்போது தாங்கள் வெளிப்படுத்திய நிலைப்பாட்டுக்கு நேரெதிர்த் திசையில் அரசாங்கம் பயணிக்க எத்தனிப்பதும் புரியாத புதிரே.

இதேவேளை, புதிய பயங்கரவாதத் தடைச் சட்டமும், அதற்கான அவகாசங்களும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையை ஏமாற்றும் வித்தையா? என்ற நியாயமான சந்தேகமும் ஏற்படவே செய்கின்றது. ஏனெனில், கடந்த செப்ரெம்பர் மாதத்துக்குள் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் என்று அரசாங்கம் தெரிவித்தது. ஆனால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் செப்ரெம்பர் அமர்வை வைத்து வழங்கப்பட்ட போலி வாக்குறுதியாகவே அது அமைந்தது. தற்போது, பெப்ரவரி மாதம் 28ஆம் திகதிக்குள் பொதுமக்களின் கருத்துகளை அறிவதற்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதுவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் மார்ச்-ஏப்ரல் அமர்வை இலக்குவைத்த கண்துடைப்பா என்ற சந்தேகம் எழவே செய்கின்றது.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


### நாளொரு நல்வார்த்தை

தந்திரங்களை பத்து வருடங்களுக்கு ஒருமுறை மாற்றிக்கொண்டு இருப்பவனால் தான் எப்போதும் தலைவனாக இருக்கமுடியும்.

–நெப்போலியன்





## 2025 பாதீடு நிதிப்பயன்பாடு யாழ்.மாவட்டம் முதலிடம்!

**யாழ்ப்பாணம்,டிசெ.26**
**2025ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிதியை முழுமையாகப் பயன்படுத்தியதன் அடிப்படையில், யாழ்ப்பாண மாவட்டம் தேசிய ரீதியில் முதலிடம் பெற்றுள்ளது.**

25 மாவட்டங்களுக்கு மத்தியில், யாழ்ப்பாணம் மாவட்டம் 100 சதவீத முன்னேற்றத்தைக் காண்பித்து முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது. அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றக் கூட்டத்தில் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் இதனைத் தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளரின் அறிக்கையிடலின் பிரகாரம், 2025ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதி முன்னேற்றம் மற்றும் பௌதீக ரீதியிலான முன்னேற்றத்தின் அடிப்படையில் 25 மாவட்டங்களிலும் யாழ்ப்பாணம் மாவட்டம் 100 வீதம் முன்னேற்றத்தை காண்பித்து, முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது.
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் மாவட்ட அபிவிருத்தி, கிராமிய அபிவிருத்தி, வாழ்வாதார கிராமிய அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வீடமைப்பு, தேசிய ஒருமைப்பாட்டினை மேம்படுத்தும் கருத்திட்டங்கள், நகர அபிவிருத்தி ஆகிய திட்டங்களின் முடிவுறுத்திய, முடிவுறுத்தாத திட்டங்கள் தொடர்பாக இந்தத் தரப்படுத்தலின் போது ஆராயப்பட்டுள்ளன. (க-27)

## மனம்பேரிக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, டிசெ.26
ஐஸ் போதைப்பொருள் உற்பத்திக்குப் பயன்படுத்தும் இரசாயனப்பொருள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு 90 நாள்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சம்பத் மனம்பேரியை மேலும் 90 நாள்கள் தடுத்து வைத்து விசாரிக்க வலஸ்முல்ல நீதவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.
அத்துடன் மனம்பேரியை எதிர்வரும் ஜனவரி 7ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

## பேருந்து விபத்து 14 பேர் காயம்!

கொழும்பு, டிசெ.26
அக்கரைப்பற்றிலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த தனியார் சொகுசு பேருந்து ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 14 பேர் காயமடைந்துள்ளனர். இந்த விபத்து நேற்றுக் காலை சேருநுவர, மகிந்தபுர சந்தியில் இடம்பெற்றுள்ளது. விபத்து இடம்பெற்ற சமயத்தில் பேருந்தில் சுமார் 21 பயணிகள் பயணித்துள்ளனர். விபத்தில் காயமடைந்த 14 பேர் உடனடியாக மீட்கப்பட்டு சிகிச்சைக்காக சேருநுவர மற்றும் மூதூர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

## துப்பாக்கிகள் மீட்பு

கொழும்பு கிரேன்ட்பாஸ் மற்றும் பிலியந்தலை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின்போது இரண்டு துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் அதற்குப் பயன்படுத்தப்படும் 27 தோட்டாக்களும் மீட்கப்பட்டதுடன் சந்தேகநபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டார்.
இதேவேளை, பிலியந்தலை பிரதேசத்தில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட பிஸ்டல் ரக துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. (ச-இ)



## காலிக் கோட்டையில் சீனக்குழு ஆராய்வு

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 20 ஆவது மத்திய குழுவின் உறுப்பினரும், ஜிசாங் தன்னாட்சி பிராந்தியத்தின் கம்யூனிஸ்ட் கட்சிக் குழுவின் செயலாளருமான வாங் ஜுன்ஷெங் காலிக் கோட்டைக்கு கண்காணிப்புப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.
வாங் ஜுன்ஷெங் தலைமையிலான சீனக்குழுவினர் இலங்கைக்கு வருகைதந்துள்ள நிலையில் காலிக்கோட்டைக்குச் சென்று கோட்டைச் சுவர்களை ஆய்வு செய்தனர். (ச-இ)

### நாளை

சனிக்கிழமை - மார்கழி 12

27.12.2025

சுபநேரம் : 06.27 - 07.57
ராகுகாலம் : 10.57 - 12.27


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் பூர்வீக நிலங்களில் திட்டமிட்டு சிங்களக் குடியேற்றங்கள்



## ரவிகரன் எம்.பி. கடும் எதிர்ப்பு

முல்லைத்தீவு,டிசெ.26

**கொக்கிளாய் முகத்துவாரத்தில் தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளை ஆக்கிரமித்து அத்துமீறிக் குடியேறியுள்ள பெரும்பான்மை இனத்தவர்களுக்கு, கொக்குத்தொடுவாயில் காணி வழங்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.**

இது தமிழர் நிலங்களைத் திட்டமிட்டுச் சூறையாடும் செயற்பாடு என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ள இடர் தொடர்பான விசேட கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது கொக்கிளாய் முகத்துவாரத்தில் குடியேறியுள்ள பெரும்பான்மை இனத்தவர்கள் தமது சொந்த இடங்களில் வெள்ளப் பாதிப்பை எதிர்கொள்வதால் அவர்களை கொக்குத்தொடுவாயில் மாற்று வாழ்விடம் அமைத்துக்குடியேற்றுவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதற்குக் கடுமையான எதிர்ப்பை வெளியிட்ட ரவிகரன் மேலும் தெரிவிக்கையில்,

கொக்கிளாயில் குடியேறியுள்ள பெரும்பான்மையின மீனவர்கள் பருவகால மீன்பிடியில் ஈடுபடுவதற்காகவே ஆரம்பத்தில் கொக்கிளாயை நோக்கி வருகைதந்தனர். இவர்கள் பருவகாலம் முடிவுற்றதும் தமது சொந்த இடங்களுக்கே திரும்பிச் செல்வர். கொக்கிளாயில் குடியேறி தங்கியுள்ள சிங்களவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தமானியும் உள்ளது.

கொக்கிளாய் முகத்துவாரத்திலிருந்த தமிழ் மக்கள் இராணுவத்தினரால் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்ட பிற்பாடு, அவர்களது பூர்வீக வாழிடங்களை ஆக்கிரமித்து பெரும்பான்மையின மீனவர்கள் குடியேறினர்.

இங்கு குடியேறியிருக்கின்ற சிங்கள மக்களுக்கு நீர்கொழும்பு, சிலாபம் உள்ளிட்ட அவர்களுடைய சொந்த இடங்களில் காணிகள், வீடுகள் உள்ளன. எனவே பெரும்பான்மை இனத்தவர்கள் தற்போது வெள்ளப் பாதிப்பை எதிர்கொள்கின்றனர் என்று காணிகளை வழங்குவதற்கு எடுக்கின்ற முயற்சியை மிகக் கடுமையாக எதிர்க்கின்றேன். அத்துடன் புலிபாஞ்சகல்லில் சுற்றுலாத்தளத்துக்கென ஒதுக்கப்பட்ட காணிகளையும் ஆக்கிரமித்து, அங்கு அத்துமீறி கடற்றொழில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு பெரும்பான்மை இனத்தவர்கள் எடுக்கின்ற முயற்சியையும் வன்மையாகக் கண்டிக்கின்றேன். முன்னைய அரசாங்கங்களைப் போன்று இந்த அரசாங்கமும் அடாவடியாகச் செயற்படக் கூடாது. அவர்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்கி, மாற்று வாழ்விடங்களை அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார். (க-246)



# பெண் முயற்சியாளர்களின் கண்காட்சியும் விற்பனையும்

யாழ்ப்பாணம்,டிசெ.26

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில், பெண் தொழில் முயற்சியாளர்களின் கண்காட்சியுடன்கூடிய விற்பனை, தேசிய ஒருமைப்பாட்டு தினம் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகள் யாழ்ப்பாணத்திலுள்ள யாழ்.பிரதம தபால் அலுவலக முற்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், யாழ்.மாநகரசபை உறுப்பினர் சுந்தரமூர்த்தி கபிலன், தொழிற்றுறைத் திணைக்களப் பணிப்பாளர் துஷியா கஜமுகன் மற்றும் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவபீட துறைத்தலைவர் சிவாணி சண்முகதாஸ் ஆகியோர் கலந்துகொண்டு முயற்சியாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினர். வடக்கு மாகாண மகளிர் விவகாரம், உணவு வழங்கல் மற்றும் விநியோகம், சமூக சேவைகள், கூட்டுறவு, தொழிற்றுறை மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் ஏற்பாட்டில், மாவட்ட ரீதியாக சந்தைப்படுத்தல் பயிற்சி வழங்கப்பட்ட பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு சந்தைப்படுத்தல் வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்காகவும், கைத்தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் நோக்குடனும் இந்தக் கண்காட்சியுடன் கூடிய விற்பனை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (க)

# பருத்தித்துறை அபிவிருத்திக்கு நகரசபைச் செயலர் இடையூறாம்

## உறுப்பினர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,டிசெ.26

பருத்தித்துறை நகரை அபிவிருத்தி செய்ய சுமுகமான முறையில் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் நிலையில், முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும்விதமாக செயலாளரின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இதற்கு எதிராக விரைவில் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று நகரசபை உறுப்பினர் எஸ்.பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை நகரசபையின் விசேட அமர்வின் பின்னர் ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பருத்தித்துறை நகரசபை ஆட்சிப் பொறுப்பேற்கப்பட்டு 6 மாதங்கள் நிறைவுபெற்றுள்ள நிலையில், சபையைக் கொண்டு நடத்துவதிலும், அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதிலும் பெரும் சவாலை எதிர்நோக்கிவருகின்றோம்.

சபை அமைவதற்கு முன்னதாகவும், பின்னராகவும் செயலாளர் தன்னிச்சையாகச் செயற்பட்டு வருகின்றார். தவிசாளருக்கு ஆலோசகராகச் செயற்படவேண்டியவர் தன்னிச்சையாகச் செயற்பட்டால், எவ்வாறு சபையை நடத்தமுடியும்? இந்த விடயத்தில் மேலிட அழுத்தங்கள் காரணமாக அரசியல் அதிகாரம் பயன்படுத்தப்படுகிறதா என்ற வலுவான சந்தேகம் எங்களுக்கு இருக்கின்றது. இதனைத் தொடர்ந்தும் நாம் அனுமதிக்கமுடியாது. பருத்தித்துறை நகரின் வளர்ச்சியும், அபிவிருத்தியும் தடைப்படாது முன்கொண்டு செல்வதற்கு வேறு வழிகள் இல்லாத நிலையில், நீதிமன்றத்தை நாடுவது ஒன்றே நீதியைப் பெற்றுத்தரும் என நம்புகின்றோம்- என்றார். (க-100)

# அனைவரும் ஒத்துழைத்தால் தீவகத்தை முன்னேற்றலாம்

## ரஜீவன் எம்.பி. அழைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.26

அடுத்த 10 ஆண்டுகளுக்குள் தீவகத்தை அபிவிருத்திசெய்வதற்கு அனைவரது ஒத்துழைப்பும், ஆரோக்கியமான ஆலோசனைகளும் அவசியம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் தெரிவித்தார்.

வேலணைப் பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதேச அபிவிருத்திக்கு தவிசாளர், பிரதேசசபையின் உறுப்பினர்கள் முன்னிலைப்படுத்தப்படவேண்டும்.

ஏனெனில் அவர்களது ஒத்துழைப்பு இருந்தால், பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வுகாணமுடியும்.

எனவே வேற்றுமைகள், புறக்கணிப்புகள் இருப்பதற்கோ, உருவாகுவதற்கோ இடமளிக்கமுடியாது. மக்களுக்கான அபிவிருத்திகள் பேதமின்றி முன்னெடுக்கப்படும்–என்றார்.

கூட்டத்தில் வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் பிடியில் இருந்து விடுவிக்கப்படவேண்டிய காணிகள், அராலிச் சந்திப் பகுதியில் பொலிஸ் நிலையம் அமைப்பதற்கான இடம் தொடர்பிலும் ஆராயப்பட்டன. (க-27)

# பொலிஸாரின் துணையுடன் சட்டவிரோத மணல் அகழ்வு

## கல்லாறு மக்கள் விசனம்

கிளிநொச்சி,டிசெ.26

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறுப் பகுதியில் இருந்து பொலிஸாரின் துணையுடன், சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரம் இன்றி இரவு வேளைகளில் மணல் அகழப்படுகின்றது என்று கல்லாறு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கடமையில் இல்லாத தினங்களில் ஒரு சில பொலிஸார் சட்டவிரோத மணல் அகழ்வுக்கு உடந்தையாகச் செயற்படுகின்றனர். பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில், மக்கள் குடியிருப்புப் பகுதியில் காணப்படுகின்ற உள்ளக வீதிகள் ஊடாக தொடர்ச்சியாக நள்ளிரவு வேளைகளில் மணல் எடுத்துச்செல்லப்படுகின்றது.



இதனால் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள வீதிகள் அனைத்தும் பயன்படுத்த முடியாத நிலையில் சேதமடைந்துள்ளன–என்றனர். (க-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
03 . 02 . 1944

மறைவு
06 . 01 . 2025

## திருமதி இரத்தினசபாபதி மங்கையற்கரசி

ஓராண்டு கழிந்தாலும்
ஓவியமாய் பதிந்திருக்கிறது
உங்கள் முகம்
காவியமாய் வாழ்ந்தீர்கள் - உம்மை
காலமெல்லாம் நினைத்திருப்போம்
தேனினிய உங்கள் குணம்
தேடி நாம் உருகுகிறோம்
நித்திய வாழ்வினிலே நீங்கா நிறையுரு
அணையாது ஒருபோதும்
நாம் கொண்ட பாசம்
இயற்கையின் அசைவுகளில் - உம்
உணர்வுகளை நுகர்ந்து
உம்பாதம் மலர் தூவி வணங்குகின்றோம்.

கதிரமலை வீதி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS 60266) E

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
17 . 10 . 1974

மறைவு
27 . 11 . 2025

கடந்த 27.11.2025 வியாழக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குலவிளக்கு

அமரர் திருமதி
## வள்ளிக்கொடி ஜெயானந்தம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 27.12.2025 சனிக்கிழமை காலை 05.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்படும். அத்துடன் நாளை மறுதினம் (28.12.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

"செல்வமால்"
தேவரையாளி

தகவல்:
குடும்பத்தினர்

(CS 60771) E

# விலைமனுக் கேள்விக்கான அழைப்பு 13
## மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்
## சிற்றுண்டிச்சாலையினை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல் 2026

1. யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் சார்பாக மாவட்டச் செயலகத்தின் திணைக்களப் பெறுகைக்குழுவின் தலைவர் தகுதியான / தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடாத்துனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.
2. இது தேசிய போட்டி விலைக்கேள்விமுறையாக இருந்தாலும் வடக்கு மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
3. யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலையினை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்
4. ஆர்வமுள்ள விலைக் கேள்விதாரர்கள் யாழ் மாவட்ட செயலக பெறுகை அலகில் கேள்விப்பத்திரங்களை இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் குறித்த விடயத்திற்கு கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகள் மட்டுமே விநியோகிக்கப்படும்
5. அக்கறையுள்ள கேள்வியாளர்கள் எழுத்து மூலமான விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாத கட்டணமாகிய (Non refundable fee) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணத்தில் உள்ள பெறுகை அலகு அலுவலகத்தின் மூலம் செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பிக்குமிடத்து 26.12.2025 தொடக்கம் 08.01.2026 வரை மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரையும் 09.01.2026 மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 1.00 மணிவரையும் அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

   இது தொடர்பாக தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் :
   021 221 4633 / 021 222 2233, 2234 (Ext. – 140) Facsimile – 021 222 3674 www.jaffna.dist.gov.lk
6. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வித்தொகைகளுக்கான கேள்விப்பிணைப்பொறுப்பு (Bid Security) கேள்விகளுடன் இணைக்கப்பட்டு தலைவர், திணைக்களப் பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 09.01.2026 பி.ப 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைக்கப்படல் வேண்டும். மேலும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வி இலக்கத்தினையும் (Bid ID), கேள்வி விபரத்தினையும் (Description) குறிப்பிடல் வேண்டும். கேள்விகள், சமூகமளிக்கும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமாக கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
7. கிடைக்கப் பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒருபகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு திணைக்கள பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.
8. மேற்படி மாவட்டச் செயலகத்தின் சிற்றுண்டி உணவகத்தை நடாத்த விண்ணப்பம் செய்யும் எவரும் மாவட்டச் செயலகத்தினால் உறுதிப்படுத்தும் தரத்திலும் அளவுகளிலும் உணவுப்பண்டங்களை வழங்குவதுடன் ஒப்பந்தகாலப்பகுதியில் இடையறாத சேவையினை வழங்க வேண்டும்.

விபர அட்டவணை கீழ்வருமாறு:

| தொ .இல | கேள்வி இல | விபரம் | ஒப்பந்த காலம் | கோரப்படும் கேள்விப்பிணைப்பணம் | | மீளளிக் கப்படாத தொகை (ருபாவில்) |
|---|---|---|---|---|---|---|
| | | | | தொகை (ருபாவில்) | செல்லுபடியாகும் காலம் | |
| 01. | JDS/PROC/Canteen/02/15( R)/2025 | சிற்றுண்டிச்சாலையினை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல் 2026 | 12 மாதங்கள் | 10,000/- | 12.02.2026 | 1,000/- |

தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்

# மரண அறிவித்தல்



தோற்றம்
30 . 12 . 1933

மறைவு
24 . 12 . 2025

## மேரி றோசலின் அல்பேட்

யாழ் இல 16. கொய்யாத்தோட்டத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மேரி றோசலின் அல்பேட் அவர்கள் 24.12.2025 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோசப் அல்பேட்டின் அன்பு மனைவியும், யாழ். மாகாண அமலமரித் தியாகிகள் சபையைச் சார்ந்த காலஞ்சென்ற அருட்தந்தை விக்டர் ஜெயசிங்கம் அடிகளாரின் தாயாரும், அன்றூ ராஜசிங்கம், எட்வேட் ரட்ணசிங்கம், கிறீஸ்ரின் ஜெயமணி, ஜோசபின் றுக்மணி, ஜோர்ஜ் குலசிங்கம் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (26.12.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு கிறீஸ்து அரசர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்பு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

16, புது வீதி
கொய்யாத்தோட்டம்
யாழ்ப்பாணம்

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டி

(CS 60267) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இடர்காலத்தில் துயர்துடைத்தோர் பரு. நகரசபையால் கௌரவிப்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.26

டித்வா பேரிடர் காலத்தில், தன்னலம் கருதாது அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய முன்களப் பணியாளர்யாளர்கள் மற்றும் விடுமுறை நேரத்திலும் அலுவலகப் பணிகளை மேற்கொண்ட உத்தியோகத்தர்கள் பருத்தித்துறை நகரசபையால் கௌரவிக்கப்பட்டனர்.

வருட இறுதி மற்றும் கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு, பருத்தித்துறை நகரசபைத் தவிசாளரின் ஏற்பாட்டில், நகரசபை மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் நகரசபையின் முன்களப் பணியாளர் களுக்கு சீருடை வழங்கப்பட்டது. தவிசாளரின் வழிகாட்டுதலில் வின்சென் டீ போல் (பிரைவேட்) லிமிடெட் சீருடைகளுக்கான அனுசரணை வழங்கியிருந்தது. (க-100)

---


## 21ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகளில்......

**வேலாயுதம்பிள்ளை மல்லிகாமலர்**
மருதமண்ணில் முத்தாக
08.06.1966

**வேலாயுதம்பிள்ளை இளவரசி**
மருதமண்ணில் முத்தாக
29.03.1995

ஆழிப் பேரலையில்
நெய்தலில் வித்தாக
26.12.2004





ஆழியினால் அவலங்கள் சூழ்ந்தது
அனுதினமும் துயரங்கள் எழுந்தது
வானமிங்கு ஓலமிட்டு அழுகிறது
மலர் மாலைகளோ கல்லறையில் நிறைகிறது

மருதங்கேணி வடக்கு,
மருதங்கேணி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS/30949) J-1

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 . 12 . 1930
மறைவு 10 . 12 . 2021





**அமரர் கணபதிப்பிள்ளை சின்னராஜா**


கடந்தது நான்கு ஆண்டுகள்
கடந்து வந்த பாதை பல ஆண்டுகள்
காலம் உள்ளவரை
மறந்திடோம் தந்தையே

வளன்புரம், கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

அன்புடன்
குடும்பத்தினர்

(CS 30966)A

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி


தோற்றம் 01.07.1957
மறைவு 06.01.2025

அமரர்
**சுப்பிரமணியம் சிவகுமார்**

ஆண்டொன்று கடந்ததய்யா,
ஆறவில்லை நம் துயரம்
எமதன்பு ஒளிவிளக்கு விண்ணுலகம் சென்றதேனோ?
தினமுங்கள் நினைப்பினிலே
மனம் தவித்து நிற்கின்றோம் நாம்,
சொல்ல வார்த்தையில்லையப்பா நம் துயரம் தீராதோ?
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

"லக்சி வாசா"
இராசா வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மகன், மருமகள்
மற்றும் குடும்பத்தினர்

(CS 60273) E

# மரண அறிவித்தல்

## சோமசுந்தரம் புவனேஸ்வரன்





நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கினை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் புவனேஸ்வரன் அவர்கள் நேற்று (25.12.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் - நீலம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற கணேசலிங்கம் - நாகம்மா தம்பதியரின் மருமகனும், இந்துமதியின் அன்புக் கணவரும், ஸ்ரீஹரி, சுகிர்தரன், துஷ்யந்தி (உப அஞ்சல் தலைவர் - யாழ் போதனா வைத்தியசாலை), சிவானந்தி, கௌரிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், புவிராஜசிங்கம், காலஞ்சென்ற சிவபாலசிங்கம் மற்றும் பரராஜசிங்கம், கலாறஜனி, உதயகுமார், சர்வமாலா ஆகியோரின் சகோதரனும், லக்ஷிகா, துஷ்யந்தன், ரவீந்திரன், யாழினி ஆகியோரின் மாமனாரும், சாகித்தியா, ஹரிஷ்னா, ஆத்விக் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 24.09.1957
மறைவு 25.12.2025

துரையப்பா ஒழுங்கை, K.K.S வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 190 2966**

(CS/30965) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையில் காணியற்றோருக்கு மார்ச்சுக்கு முன்னர் காணிகள்!

## பிரதேச செயலர் உறுதி

**முல்லைத்தீவு,டிசெ.26**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் காணிகளற்றோருக்கு எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர் காணிக் கச்சேரிகளை நடத்தி, காணிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.**

கரைதுறைப்பற்றுப் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதில் மாவட்டத்தில் 3 ஆயிரத்து 389 பேருக்கு குடியிருப்பதற்கு காணிகள் இல்லை என்று சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், காணியற்றோருக்கு விரைவில் காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதற்குப் பதிலளித்த பிரதேச செயலர்,

புதுக்குடியிருப்பில் ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு காணிகள் இல்லை. கூடிய விரைவில் இவர்களுக்குக் காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். காணியற்றோருக்கு வழங்கப்படவேண்டிய காணிகள் இனங்காணப்பட்டுள்ளன.

அவற்றை அளவீடுசெய்து வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. எனவே காணியற்றவர்களுடைய பட்டியலை ஆராய்ந்து, எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர் காணிக்கச்சேரி நடத்தப்படும்.- என்றார்.

அதேவேளை மாந்தை கிழக்கு, துணுக்காய், ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களிலும் காணியற்றோருக்கு காணிகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (சு-246)

# வலிமையான தேசமாக இலங்கை மீண்டெழும்

## நத்தார் வாழ்த்துச் செய்தியில் சஜித் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.26

2025 நத்தார் நமக்கு நினைவூட்டுவது, இழந்தவற்றை மட்டுமல்ல, நம்மிடம் உள்ள இழக்காதவற்றையும்தான். அதாவது ஒருவருக்கொருவர் கருணை காட்டுதல், ஒன்றாக இருத்தல், நாளைய நாள் பற்றிய நம்பிக்கையின் விசுவாசம் ஆகியவற்றையாகும். அந்த விசுவாசத்துடன், இலங்கையால் மீண்டும் வலிமையான, நீதியான மற்றும் மனிதாபிமான தேசமாக எழுந்து நிற்கமுடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நத்தார்ப் பண்டிகையை முன்னிட்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வெளியிட்ட வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கையை கடுமையாக பாதித்த டித்வா புயலுக்குப் பின் நம் தேசம் எதிர்கொண்ட வலி மிகுந்த அனுபவங்களை நினைவிற்கொண்டு 2025 நத்தார்ப் பண்டிகையை நாம் எதிர்நோக்குகின்றோம்.

கடவுளின் மகனான இயேசுக்கிறிஸ்துவின் பிறப்பை மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாடும் நத்தார்ப் பண்டிகை என்பது அழிவுகளுக்கிடையே நம்பிக்கை பிறக்கும் காலமாக குறிப்பிடப்படலாம். எதிர்காலத்தில் நாம் ஒரு நாடாக பெரிய சவால்களை எதிர்கொள்ளவேண்டியிருக்கும். எனவே இந்த அழிவிலிருந்து பாடங்களைக் கற்று, உதவியற்றவர்களைப் பாதுகாக்கும், பேரழிவுகளின் முன்னால் மக்களைத் தனிமைப்படுத்தாத அரசை உருவாக்குவது நம் அனைவரின் கூட்டுப்பொறுப்பாகும்.

அனைத்துக் குடிமக்களுக்கும் அமைதி, செழிப்பு, நல்லிணக்கம், ஒற்றுமை மற்றும் புதிய நம்பிக்கை நிறைந்த நத்தார்ப் பண்டிகையாக அமையவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்-என்றுள்ளது. (எ-இ)



# கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு தகுதியானவரை உடனே நியமியுங்கள்

## ஜனாதிபதிக்கு ஹர்ஷ டி சில்வா கடிதம்

கொழும்பு, டிசெ.26

கணக்காய்வாளர் நாயகத்துக்கான நியமனம் தொடர்ந்து இழுபறியில் உள்ளதால் அரசமைப்பால் வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளை முன்னெடுப்பதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நாடாளுமன்ற நிதிக் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அரசமைப்பின் பிரகாரம் தாமதமில்லாமல் தகுதியான ஒருவரை கணக்காய்வாளர் நாயகமாக நியமிக்கவேண்டும் என்று அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஹர்ஷ டி சில்வா ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். அந்தக் கடிதத்தில் உள்ளதாவது-

இயற்கை அனர்த்தங்களால் நாடு மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள பின்னணியில் கணக்காய்வாளர் நாயகம் பதவி கடந்த 7ஆம் திகதியில் இருந்து வறிதாகியுள்ளது. கணக்காய்வு சேவை ஆணைக்குழுவுக்கும் தலைவர் இல்லாத காரணத்தால் பல சிக்கல்கள் தோன்றியுள்ளன.

அரசமைப்பின் 148ஆவது பிரிவின் பிரகாரம் அரச நிதி தொடர்பான முழுமையான அதிகாரம் நாடாளுமன்றம் வசமுள்ளது. நாடாளுமன்றத்தின் நிதி அதிகாரத்தை சிறந்த முறையில் வினைத்திறனாக செயற்படுத்துவதற்கு சுயாதீன கணக்காய்



வாளர் பதவி அத்தியாவசியமானதாகும்.

கணக்காய்வாளர் நாயகத்துக்கான நியமனம் தொடர்ந்து இழுபறி நிலையில் உள்ளதால் அரசமைப்பால் வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளை முன்னெடுப்பதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அரச கணக்குகள் தொடர்பான தெரிவுக்குழு, மற்றும் ஏனைய நிதி தொடர்பான குழுக்கள் கணக்காய்வாளர் நாயகத்தால் வெளியிடப்படும் கணக்காய்வு அறிக்கைக்கு அமைய நேரடியாக செயற்படுகிறது. தற்போது நாடாளுமன்றத்தின் நிதிக் கண்காணிப்புப் பணிகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தற்போதைய நெருக்கடியான நிலைமையைக் கருத்திற்கொண்டு தாமதமில்லாமல் தகுதியான ஒருவரை கணக்காய்வாளர் நாயகமாக நியமிக்கவேண்டும்-என்றுள்ளது. (எ-இ)

# சவால்களை வெற்றிகொண்டு ஒன்றிணைந்து மீண்டெழுவோம்

## நத்தார் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.26

யதார்த்தத்தின் வேதனையான உண்மையை எதிர்கொண்டு, சவால்களை வென்று ஒரு நாடாக ஒன்றிணைந்து மீண்டெழுவோம் என்று அனைவருக்கும் அழைப்பு விடுத்து அமைதி, மகிழ்ச்சி, மனிதநேயம், இரக்கம் மற்றும் கருணை ஆகியவற்றால் நிறைந்த இனிய நத்தார் பண்டிகையாக இந்நாள் அமையவேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். நத்தார்ப் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி வெளியிட்ட வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது- இலங்கையர்களாகிய நாம், ஒரு நாடாக, மிகவும் வேதனையான இயற்கைப் பேரழிவை எதிர்கொண்ட பிறகு உறுதியுடன் மீண்டுவரும் சந்தர்ப்பத்திலேயே இந்த நத்தார்ப் பண்டிகையை கொண்டாடுகிறோம்.

அன்பு, அமைதி, மகிழ்ச்சி, பகிர்வு மற்றும் தியாகம் ஆகியவையே நத்தார்ப் பண்டிகையின் உண்மையான அர்த்தங்கள் ஆகும். பாதிக்கப்பட்டவர்களுக்கு சகோதர உணர்வுடன் ஆதரவு வழங்குதல் மற்றும் மனித குலத்தின் விடுதலைக்கான அர்ப்பணிப்பு என்பன இவற்றில் முதன்மையானதாகும் - என்றுள்ளது. (எ-இ)



வேலணைப் பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்க ஏற்பாட்டில் ஒளிவிழா பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (சு-41-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வாசிப்புமாத விழா!

சாவகச்சேரி, டிசெ. 26
சாவகச்சேரி நகர மன்றத்தின் கீழுள்ள நுணாவில் பொதுநூலகத்தால் நடத்தப்படும் தேசிய வாசிப்புமாத விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் அத்தியட்சகர் த.காண்டீபன் கலந்துகொள்ளவுள்ளார். நிகழ்வில் நகர மஞ்சரி நூல்வெளியீடும் இடம்பெறவுள்ளது. (ம-131)


## 31ம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 17 . 05 . 1960



மறைவு 26 . 11 . 2025

கடந்த 26.11.2025 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் சொர்ணமலர் தவராசா

அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (26.12.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**


மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு துயருற்று இருந்த வேளையில் பல வழிகளிலும் உதவி புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும், நேரில், தொலைபேசி, சமூக ஊடகங்களுடாக ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக்கிரியையில் கலந்து கொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

காந்திஜி வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்
077 136 2427

## மரண அறிவித்தல்

மலர்வு 10 . 06 . 1948



உதிர்வு 25 . 12 . 2025

### நடராசா அம்பிகாநிதி

**(உரிமையாளர் A.V. Fancy House, சங்கானை, சந்தை வியாபாரி-சங்கானை)**

கட்டுவனைப் பிறப்பிடமாகவும், குளத்தடி வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா அம்பிகாநிதி அவர்கள் நேற்று (25.12.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், கார்த்திகேசு பொன்னம்மா தம்பதியரின் அருமை மருமகனும், வதனாம்பிகை அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற கேமாவதி மற்றும் சிவநேசம், இன்பமலர் ஆகியோரின் சகோதரனும், குணேஸ் (இளைஞர் சேவை அதிகாரி, மாவட்டக் காரியாலயம், நெடுந்தீவு), மதிபன் (உரிமையாளர், சங்குநாதம் Fancy House), பாலகிருஷ்ணன் (ஊழியர், பிராந்திய காரியாலயம் (வடபிராந்தியம்) தேசிய சேமிப்பு வங்கி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனபாலசிங்கம், செல்வராசா, நவரட்ணம், தர்மகுலசிங்கம், சிறீதரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2025) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குளத்தடி வீதி,
சங்கானை.

தகவல் :
குடும்பத்தினர்
077 3472529

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் சபாரட்ணம் இராஜதுரை

**கணக்காளர் S.Rajathurai & co**

மண்ணில் 05.06.1947 விண்ணில் 28.11.2025

**பாசத்தின் பிறப்பிடமாய் பாரினிலே**
**நேசத்துடன் எங்களை ஆளாக்கி**
**கண்ணின் மணிபோல எமைக்காத்த**
**அன்புத் தெய்வமே! அப்பா!**

**மாதம் ஒன்று ஆகியும் மனம் ஆற மறுக்கிறது**
**உங்கள் அன்பு முகம் மறைந்தாலும்**
**ஆறிடுமோ உங்கள் நினைவலைகள் அப்பா!**

**எங்களை விட்டுப் பிரிந்தாலும் எங்கள்**
**வாழ்வில் ஒளியாகத் தொடரும் உங்கள் ஆத்மா**
**இறைவன் திருவடிகளில் சாந்தி பெற வேண்டுகின்றோம்.**

கடந்த 28.11.2025 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர் சபாரட்ணம் இராஜதுரை அவர்களின் மரணச் செய்திகேட்டு நேரில் வந்தும், தொலைபேசி, முகநூல், Rip book மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர் வளையங்கள், மலர் மாலைகள் சாத்தியவர்களுக்கும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் இன்றுவரை சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (26.12.2025) வெள்ளிக்கிழமை சாட்டி வெள்ளைக் கடற்கரையிலும், வீட்டுக்கிருத்திய மதியபோசன நிகழ்வு நாளை மறுதினம் (28.12.2025) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

215/18
இராசாவின் தோட்டம் வீதி
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்படுகொலை விசாரணை நடத்தி தமிழீழத்துக்குப் பொது வாக்கெடுப்பு!

## தமிழக அரசியல் தலைவர்கள் கூட்டறிக்கை

சென்னை, டிசெ. 26
இனப்படுகொலைகள் தொடர்பில் நீதியான விசாரணை இடம்பெற வேண்டும். அத்துடன், தமிழீழம் தொடர்பில் பொது வாக்கெடுப்பு நடத்தப்படுவதும் அவசியம் என்று தமிழக அரசியற் தலைவர்கள் கூட்டறிக்கை வெளியிட்டுள்ளனர்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் வைகோ, தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் வேல்முருகன், மே17 இயக்கத்தின் திருமுருகன் காந்தி, முக்குலத்தோர் புலிப்படைக் கட்சியின் தலைவர் கருணாஸ் உட்பட பல அரசியற் பிரமுகர்கள் இணைந்து இந்தக் கூட்டறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் உள்ளதாவது:
தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி விசாரணையை ஐக்கிய நாடுகள் சபை நடத்த வேண்டும் என்று வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதல்வரான சி.வி.விக்னேஸ்வரன் தீர்மானம் நிறைவேற்றினார். தமிழக சட்டமன்றத்தில், சுதந்திரத் தமிழீழத்துக்கான பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும், தமிழீழ இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஈழத் தமிழர் படுகொலையைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கையை இந்திய அரசும், உலக நாடுகளும் மேற்கொள்ள வேண்டும் என்று முத்துக்குமார் உள்ளிட்ட 19 தமிழர்கள் தீக்குளித்து மாண்டார்கள். எனவே, ஈழத்தமிழர்களின் அரசியற் பிரச்சினையை நிவர்த்தி செய்யும் வகையில் இந்திய அரசியற் கட்சிகளும், உலக நாடுகளும் இனப்படுகொலை தொடர்பில் நீதியான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். சுதந்திரத் தமிழீழத்துக்கு ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வையில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

தமிழர் காணிகளில் இடம்பெற்றுள்ள அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள் நீக்கப்பட வேண்டும். ஈழத்தமிழர் தாயகத்திலிருந்து இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும். அதற்கான ஆயத்த வேலைகளைச் செய்ய தமிழகத்தில் உள்ள தமிழர்களும், புலம்பெயர் வாழ் தமிழர்களும் கடமையாற்ற வேண்டும் - என்றுள்ளது. (எ-இ)

### மருத்துவத்...

சிறுமி டினோஜாவின் இறப்புத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
குகநேசன் டினோஜாவின் மரணம் தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்படும். சிறுமியின் சடலத்தில் இருந்து பெறப்பட்ட மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பரிசோதனைகள் மற்றும் விசாரணைகளில், மருத்துவத் தவறால்தான் இறப்புச் சம்பவித்ததாகத் தெரியவந்தால், உரிய தரப்பினருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ-ம-26)

### அனைத்து...

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியின் கீழ் இயங்கிவரும் அந்த அமைப்பு, இலங்கையில் சிறுபான்மையின மக்களுக்கான அரசியல் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:-
இலங்கை அரசியலில் தற்போது மிகவும் முக்கியமானதொரு காலகட்டமாகும். சிறுபான்மையினத்தவர்களில் பெரும் எண்ணிக்கையானோர் மாற்றத்தை முன்னிறுத்தி, சமத்துவத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் ஒடுக்குமுறைகளை இல்லாதொழித்தல் ஆகிய வாக்குறுதிகளை அளித்த கட்சியொன்றுக்கு வாக்களித்துத் தெரிவுசெய்துள்ளனர். நாட்டின் பெரும்பான்மையின மக்களைப்போல அவர்களும்ஊழலைமுடிவுக்குக்கொண்டுவரல், அரசியல் கலாசாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தல் மற்றும் 2019 ஆம் ஆண்டு ஏற்பட்ட நிதி நெருக்கடியின் பின்னரான பொருளாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என்பவற்றையே கோருகின்றனர். அவற்றை உறுதிப்படுத்துவதாக வாக்குறுதி அளித்திருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், பேரினவாதப் போக்கையும் முடிவுக்குக் கொண்டுவருவதாகத் தெரிவித்தது.

இருப்பினும் தேசிய மக்கள் சக்திக்கான சிறுபான்மையினத்தவரின் ஆதரவு என்பது அவர்கள் இதுவரை முன்னுரிமை அளித்துவந்த விடயங்களில் ஏற்படும் மாற்றத்துக்கு சமமானதா? இதுவரை சிறுபான்மையினஅரசியலைவடிவமைத்த அவர்களது நீண்டகாலக் கோரிக்கைகளான மனித உரிமைகள், நீதி மற்றும் அரசியல் சுயாட்சி என்பவற்றிலிருந்து விலகிச் செல்வதற்கு சமமானதா? என்பது பற்றித் தெளிவாகத் தெரியவில்லை.

இருப்பினும் இலங்கை சுதந்திரமடைந்தில் இருந்து நாம் அறிந்த சிறுபான்மையின அரசியல் பிரதிநிதித்துவம் இப்போது வெகுவாக மாற்றமடைந்துள்ளது. பழைய தேசிய அரசியல் கட்சிகள் தம்மைத்தாமே நிலைமாற்றத்துக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. அந்தச்செயன்முறையில் மிகப்பொருத்தமான சிறுபான்மையின அரசியல் பிரதிநிதித்துவத்துக்கான வாய்ப்புகள் உருவாகும்.

நீண்டகாலமாகப் பழக்கப்பட்ட முகங்களுடன் நாட்டிலுள்ள சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் அண்மைய காலங்களில் அவற்றுக்கான அங்கீகாரத்தைப் பெருமளவுக்கு இழந்து வருகின்றன. தேசிய மக்கள் சக்தியின் வெற்றியால் ஏற்பட்ட விளைவுகள் நிரந்தரமில்லாத போதிலும், அந்த விளைவுகள் சிறுபான்மையின அரசியல் கட்சிகள் தாம் செய்யத் தவறிய விடயங்களை சுயபரிசீலனை செய்யவேண்டிய கட்டாயத்தைத் தோற்றுவித்துள்ளன. இவ்வேளையில் சிறுபான்மையினக் கட்சிகள் நாட்டின் அரசியலில் தமது [illegible] மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டும். அத்தோடு பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டியது மிக அவசியமாகும்.

தற்போது தேசிய மக்கள் சக்தியிடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலம் இருக்கின்றது. அதனைப் பயன்படுத்தி இலங்கையின் சகல இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான வரலாற்று முக்கியத்துவம் மிக்க வாய்ப்பு அதன்வசம் உள்ளது. அதேபோன்று நீண்டகால வரலாற்றைக்கொண்ட உரிமைகள் மற்றும் நீதிக்கான கோரிக்கைகளுக்கும், மூன்றுதசாப்தகாலமோதலுக்கு வித்திட்ட அடிப்படைக் காரணங்களுக்கும் தீர்வு காண்பதே சகல கட்சிகளினதும் முன்னுரிமைக்குரிய இலக்காக இருக்க வேண்டும் - என்றுள்ளது. (அ-ம)

### மனச்சாட்சி...

கொழும்பு மாநகரசபையில் உள்ள உறுப்பினர்கள் மனசாட்சியின் பிரகாரம் செயற்பட வேண்டும் என மாநகர மேயர் கோரிக்கை விடுத்துள்ளார். கொழும்பு மாநகரசபையின் பட்ஜெட் தோற்கடிக்கப்பட்ட பின்னரே அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

புதியதொரு அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்தப்போவதாக கூறியே தேசிய மக்கள் சக்தியினர் ஆட்சிக்கு வந்தனர். ஆனால் இன்று வேறு விடயங்களே நடந்தேறி வருகின்றன. எந்த ஆட்சியிலும் இடம்பெறாத வகையில், நபர்களை இலக்கு வைத்து தாக்கும் தற்போது இடம்பெற்று வருகின்றது. சேறுபூசும் அரசியலையே ஆளுங்கட்சியினர் முன்னெடுத்து வருகின்றனர். இதுதான் தேசிய மக்கள் சக்தியினர் கூறிய மாற்றமா?

மனசாட்சி குறித்து ஆளுங்கட்சியினர் கதைக்கின்றனர். ஆனால் உள்ளாட்சி சபைகளில் ஆட்சியமைப்பதற்காக எதிரணியில் உள்ள கட்சிகளின் ஆதரவு பெறப்பட்டுள்ளது. மனச்சாட்சி இருந்திருந்தால் பிள்ளையானிடம் உதவி கோரப்பட்டிருக்குமா? ஆளுங்கட்சியினரிடம் மனசாட்சி இல்லை. அவர்கள் மனச்சாட்சி பற்றி பேசுவது நகைச்சுவை - என்றார். (அ-ம-44)

### வாடகை...

வாடகைக்குத் தங்கியுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்டுவந்த அரச ஆடம்பர மாளிகைகளை, ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் திரும்பப் பெற்றது. இதையடுத்து, விஜேராம பகுதியில் உள்ள அரச சொகுசு மாளிகையில் தங்கியிருந்த மஹிந்த ராஜபக்ச, அங்கிருந்து வெளியேறி தனது சொந்த ஊரான தங்காலைக்குச் சென்றார்.

தற்போது மீண்டும் கொழும்பு நுகேகொட பகுதிக்குத் திரும்பியுள்ளார். தற்போது அவர் வாடகை வீட்டில் குடியிருக்கின்றார் என்று தெரியவருகின்றது. அரசியலை முன்னெடுப்பதற்கு இலகுவாகவும், மருத்துவ வசதிகளைக் கருத்திற்கொண்டுமே அவர் நுகேகொட பகுதிக்குத் திரும்பியுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-ம-44)

### சுனாமியில்...

2004ஆம் ஆண்டு சுமத்ரா தீவுக்கு அருகில், இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட 9.3 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தால் உருவான சுனாமிப் பேரலைகள் இலங்கையின் கரையோரப் பகுதிகளை வலுவாகத் தாக்கின. இந்தப் பேரிடரில் 35 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன், 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர்.

இந்தப் பேரிடரின் 21ஆவது நினைவு நாளே இன்று கடைப்பிடிக்கப்படவுள்ளது. தமிழர் தாயகத்தில் உள்ள சுனாமி நினைவாலயங்களிலும் அஞ்சலி நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், தேவாலயங்கள் மற்றும் கோவில்களிலும் இன்று காலை விசேட வழிபாடுகள் மற்றும் ஆராதனைகள் இடம்பெறவுள்ளன. (அ-ம)

### யாழ்....

வீடுகள், கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் அந்தக் குழுவினர் கொள்ளைகளிலும் திருட்டுகளிலும் ஈடுபட்டுள்ளனர்என்றுமுதற்கட்டவிசாரணைகளின் அடிப்படையில் கலஹா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் 6 திருட்டுகள், வவுனியாவில் 7 திருட்டுகள், கம்பளையில் 7 திருட்டுகள், நுவரெலியாவில் 7 திருட்டுகள் என 27 திருட்டுகளுடன் அவர்களுக்கு நேரடித் தொடர்பிருப்பது இதுவரை கண்டறியப்பட்டுள்ளது. சந்தேகநபர்களிடம் இருந்து தங்க நகைகள், பெறுமதியான பொருள்கள், 12 லட்சம் ரூபா பெறுமதியான பணம் உள்ளிட்ட ஏராளமான சான்றுப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் மட்டும் சந்தேகநபர்களுக்கு எதிராக ஒன்பது பிடியாணைகள் உள்ளன. அத்துடன், அவர்களுக்கு எதிராக தாக்குதல், கொலைமிரட்டல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. சந்தேகநபர்களை கண்டி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-26)

### சிறுமி...

சிறுமி முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அண்மையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். அந்தச் சிறுமிக்கு வழங்கப்பட்ட சிகிச்சை யில் உள்ள தவறுகள் காரணமாகவே, இறப்பு சம்பவித்ததாக உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இதையடுத்தே, இந்த விடயத்தில் நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் தெரிவித்ததாவது:
முல்லைத்தீவு சிலாவத்தைப் பகுதியைச் சேர்ந்த குகநேசன் டினோஜா என்னும் சிறுமியின் மரணத்தில் சந்தேகங்கள் இருப்பதாக எனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் இவ்வாறான சந்தேகத்துக்கு இடமான இறப்புகள் தொடர்ச்சியாகச் சம்பவிக்கின்றன. எனக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய அந்தப் பெண்ணின் குடும்பத்துடனும், மருத்துவர்களுடனும் ஏற்கனவே கலந்துரையாடல் நடத்தியுள்ளேன். இந்த விடயத்துக்கு நீதிகோரி நாடாளுமன்றத்திலும் வலியுறுத்துவேன் - என்றார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் மார்கழி மாத இதழ் வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.26

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஞானச்சுடர் சஞ்சிகையின் 336 ஆவது மார்கழி மாத இதழ் வெளியீட்டு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு, சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும். சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், குப்பிழான் தெற்குப் பகுதியின் ஓய்வுநிலைக் கிராம அலுவலர் சோ.பரமநாதன் மலர் வெளியீட்டுரையையும், தென்மராட்சி வலய ஓய்வுநிலைக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி மலரின் மதிப்பீட்டுரையையும் ஆற்றுவர். (க-66)

# யாழ். ஊடக அமையத்தின் ஊடகவியலாளர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.26

யாழ்.ஊடக அமையத்தின் ஊடகவியலாளர்கள் கௌரவிப்பும் 15 ஆம் ஆண்டு விழாவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு பலாலி வீதி கோண்டாவிலில் அமைந்துள்ள ராஜேஸ்வரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட முன்னாள் பீடாதிபதி சிரேஷ்ட மருத்துவ நிபுணர் பேராசிரியர் சுப.ரவிராஜும், சிறப்பு விருந்தினர்க ளாக வடமாகாண அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், யாழ் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம், முன்னாள் சட்ட மருத்துவ அதிகாரி மருத்துவ கலாநிதி சி.சிவரூபன், சட்டத்தரணி வி.மணிவண்ணன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-159)

# ஒப்பந்ததாரர்கள் இழுத்தடிப்பு; சிறுகுளங்கள் உடைப்பெடுப்பு

முல்லைத்தீவு, டிசெ.26

முல்லைத்தீவு மாவட்டத்தில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்துக்குரிய சில சிறிய நீர்ப்பாசனக்குளங்கள் வெள்ள அனர்த்தத்தின்போது உடைப்பெடுத்துள்ளன. ஒப்பந்ததாரர்களால் உரியகாலத்தில் சீரமைப்பு வேலைகள் தொடங்கப்படாமல் பொருத்தமற்ற காலத்தில் மேற்கொள்ளப்பட்ட குளச்சீரமைப்பு வேலைகளால் இந்த நிலை உருவாகியுள்ளது என்று வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட வெள்ள அனர்த்தப் பாதிப்புத் தொடர்பான விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையர் பதிலளிக்கையில்,


ஒப்பந்ததாரர் உரியகாலத்தில் சீரமைப்பு வேலைகளை முன்னெடுக்காததால் இரு குளங்கள் உடைப்பெடுத்துள்ளன. இவ்வாறு உடைப்பெடுத்த குளங்களுக்கு எம்மால் நிதி மேலதிகமாக செலவிடப்படமாட்டாது. ஒப்பந்ததாரர் தமது நிதியைப் பயன்படுத்தியே சீரமைப்புப்பணிகளை மேற்கொள்ளவேண்டுமென ஒப்பந்ததாரருக்கு அறிவித்தல்களை வழங்கியிருக்கின்றோம். இவ்வாறு உடைப்பெடுத்த குளங்களை சிறுபோக நெற்செய்கைக் கேற்றவாறு விரைவாக சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளுமாறும் ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் சில நாள்களில் உடைப்பெடுத்த குளங்களைச் சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் - என்றார். (ச-246)

# இறுதிப்போட்டியும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம்,டிசெ.26

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு வல்வெட்டித்துறை உதயசூரியன் உல்லாசக் கடற்கரையில் இடம்பெறும். வ.செந்தூரன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வித்திணைக்களப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் (உடற்கல்வி) இ.ராஜசீலன் கலந்துகொள்வார். (க)

வரலாற்றுப்பிரசித்திபெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த விநாயகர் பெருங்கதை விரதத்தின் கஜமுகாசூர சங்கார உற்சவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை ஆயிரக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது. (ச-66)



# தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு கொழும்பில் ஆபத்து இல்லை!

## அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவிப்பு

கொழும்பில் தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என்று அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.


தேசிய மக்கள் சக்தியின் ஆளுகையின் கீழுள்ள கொழும்பு மாநகரசபையின் வரவு-செலவுத் திட்டம் தோல்வியடைந்துள்ளமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கொழும்பு மாநகரசபையின் வரவு-செலவுத் திட்டம் தோல்வி அடைந்திருந்தாலும் நிர்வாக நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு எவ்விதத் தடையும் இல்லை.

உள்ளாட்சிசபைத் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் அடுத்த தடவை வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால்கூட அடுத்தவருடம்வரை மேயரை மாற்றவேண்டியதில்லை.

மூன்றாவது தடவை தோற்கடிக்கப்பட்டால் புதிய மேயரைத் தெரிவுசெய்யவேண்டும். இதுவும் கொழும்பு மாநகரசபையில் எதிரணி தரப்புக்கு சவால்மிக்க விடயமாக அமையும். அதற்குரிய பெரும்பான்மை இல்லை. அதனால் கொழும்பு மாநகரசபையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை-என்றார். (எ-44)









இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் ... அவர்களது பணிமனையில் 26.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org